இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 46 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 09 – வியாழக்கிழமை 25 செப்டம்பர் 2025 – கோவை ★ ★ 12+12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 46: Thiruvalluvar Year - 2056 - Purataasi 09 - Thursday 25 September 2025 - Kovai ★★ 12+12 Pages ₹5.00

## மக்கள் இன்னும் பல கோடி ரூபாயை சேமித்திருப்பார்களே!

# 8 ஆண்டுகளுக்கு முன்பே ஜி.எஸ்.டி. வரியை ஏன் குறைக்கவில்லை?

## ஒன்றிய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, செப். 25 -**

**“ஜி.எஸ்.டி. வரியை 8 ஆண்டுகளுக்கு முன்பே குறைத்திருந்தால் மக்கள் இன்னும் பல கோடி ரூபாயை சேமித்திருப்பார்களே” என்றும் ஏன் முன்பே குறைக்கவில்லை?” என்றும் ஒன்றிய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.**

ஒன்றிய அரசின் ஜி.எஸ்.டி. வரிக்குறைப்பு தொடர்பாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

“ஜி.எஸ்.டி. வரிக்குறைப்பாலும் வருமான வரி விலக்குக்கான உச்சவரம்பை உயர்த்தியதாலும் இந்தியர்கள் 2.5 லட்சம் கோடி ரூபாயைச் சேமிக்கலாம்” என பிரதமர் அவர்கள் கூறியுள்ளார். இதைத்தானே தொடக்கத்தில் இருந்தே எதிர்க்கட்சிகளான நாங்கள் வலியுறுத்தி வந்தோம்? 8 ஆண்டுகளுக்கு முன்பே



இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், இந்தியக் குடும்பங்கள் இன்னும் பல கோடி ரூபாயை எப்போதோ சேமித்திருக்குமே?

மேலும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வரிக்குறைப்பில் சரிபாதி அளவு மாநில அரசுகளின் பங்கிலிருந்துதான் செய்யப்படுகிறது. இந்த உண்மையை ஒன்றிய அரசு மறைப்பதாலும் பாராட்ட மறுப்பதாலும் இதனைச் சுட்டிக்காட்ட வேண்டியது எனது கடமையாகிறது.

மற்றொரு புறம், ஒன்றிய பா.ஜ.க. அரசு மாநிலங்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய நிதியைத் தர மறுத்து வருகிறது. இந்தித் திணிப்பை ஏற்க மறுக்கும் ஒரே காரணத்துக்காக, ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய நிதி மறுக்கப்படுகிறது. இந்த அநீதி எப்போது முடிவுக்கு வரும்?

தங்கள் உரிமைகளைப் பாதுகாத்து, தம் மக்களுக்காக முன்நிற்கும் மாநில அரசுகளைத் தண்டிப்பதன் வழியாக இந்தியா வளர்ச்சி பெற முடியாது. கூட்டாட்சிக் கருத்தியலுக்கு மதிப்பளியுங்கள், உரிய நிதியை விடுவியுங்கள், மக்களுக்கு நியாயமாகச் சேர வேண்டியதைத் தந்து அவர்களைப் பயனடைய விடுங்கள்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். உடன் கழக துணை பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் உள்ளார்.

# தமிழ்நாடு சட்டமன்றம் - அக்.14ஆம் தேதி கூடுகிறது!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவிப்பு!

சென்னை, செப்.25 –

தமிழ்நாடு சட்டமன்றம் அக்டோபர் 14ஆம் தேதி அன்று கூடுகிறது என்று பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் கூறியதாவது:–



சென்னை தலைமைச் செயலகத்தில் சபாநாயகர் அப்பாவு அவர்கள் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

**அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்யும்!**

அக்டோபர் மாதம் 14–ந்தேதி சட்டசபை கூட்டத்தொடர் தொடங்கும். அன்றைய தினம் 2025–2026ம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானிய கோரிக்கை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்படும். எத்தனை நாட்கள் சட்டமன்றம் என்பது அலுவல் ஆய்வு கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தெரிவித்தார்.

# வாரத்தில் 4 நாட்கள் தொகுதியில் தங்கி மக்கள் பணியாற்ற வேண்டும்!

## நாடாளுமன்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, செப். 25 -**

**நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாரத்தில் 4 நாட்கள் தொகுதியில் தங்கி மக்கள் பணியாற்ற வேண்டும் - 15 நாட்களுக்கு ஒருமுறை அவர்கள் ஆற்றிய பணி குறித்து அறிக்கையை தனக்கு அளிக்க வேண்டும் - கழக மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் உத்தரவு.**

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (23.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திராவிட முன்னேற்றக் கழக மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின், போன்ற முகாம்களில் கலந்து கொண்டு, மக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்து, அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுத்திட மாவட்ட நிர்வாகத்துடன் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் விடுபட்ட மகளிரை சேர்த்திடும் வகையில் மேற்காணும் முகாம்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, தகுதியுள்ள மகளிர் அனைவருக்கும் உரிமைத் தொகை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (23.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திராவிட முன்னேற்றக் கழக மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக பொதுச் செயலாளர் – நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொருளாளரும், மக்களவை குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா, தலைமைக் கழக நிர்வாகிகள், கழக மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### வெற்றிக்கு கடுமையாக பணியாற்ற வேண்டும்!

2024ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழக கூட்டணி 40க்கு 40 தொகுதிகளை வென்று வரலாற்று சாதனை படைத்தது. அதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அரும்பாடுபட்டார்கள். அதேபோல், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் வெற்றிக்கு கடுமையாக பணியாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களை தொடர்ச்சியாக சந்தித்து, அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்து அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும். மேலும், அமைச்சர் பெருமக்கள், மண்டல பொறுப்பாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள் ஒருங்கிணைந்து கழகப் பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

### 15 நாட்களுக்கு ஒரு முறை அறிக்கை!

நாடாளுமன்றம் நடைபெறும் நாட்களை தவிர்த்து, குறைந்தது வாரத்தில் 4 நாட்கள் தங்கள் தொகுதியில் தங்கி மக்களைச் சந்தித்து, அவர்களுக்கான தேவையான பணிகளை செய்திட வேண்டும் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், தங்கள் தொகுதியில் ஆற்றிய மக்கள் பணிகள், பாராளுமன்றத்தில் தமிழ்நாட்டு மக்களின் நலனை காத்திடும் வகையில் எடுத்துரைத்த கருத்துகள் ஆகியவை பற்றிய அறிக்கையை 15 நாட்களுக்கு ஒருமுறை தனக்கு அளித்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மேலும், ஒன்றிய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இதில் கழக பொதுச் செயலாளர் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொருளாளரும், மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா, தலைமைக் கழக நிர்வாகிகள், கழக மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.